# மனிதநேய கவசம்

மாத இதழ்

## MANITHA NEIYA KAVASAM

मणिथानेय कवसम्

Run by **Humanity Protection Organization Trust**

(Registered by Govt. of India)

Registration No. **TNTAM/25/A2910**

கவசம் Volume 2

ஏப்ரல் 2026

இதழ் Issue 7

பொதுமக்கள் நலன் கருதி விலையின்றி விநியோகிக்கப்படுகிறது



E-331/48, Meenakshi Road, TVS Nagar, Madurai - 625003. Ph : 0452-2600105




மாணவர்கள் மனநலத்தை பாதிக்கும் ஆன்லைன் விளையாட்டுகள், பெற்றோர்கள் கவனத்திற்கு...



செக் மோசடி : பாதுகாப்பாக இருந்துக்கோங்க !

மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்

திரு. **இரா. செல்வராஜ்** B.Sc.,B.L.,




நுகர்வோர் சட்டங்களும், பாதுகாப்பும்...

முனைவர் **ந. அசோகன்** HCPO மதுரை



மினரல் வாட்டர்... பாதுகாப்பானதா ?

**அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**


hpo.kavasam@gmail.com www.hpokavasam.org 98650 91526, 99525 33887

# காரோஸ் ®

## அக்மார்க் கிரேடு 1 மரச்செக்கு எண்ணெய்கள்




COROS OIL ®
ISO 22000 CERTIFIED
ISO 22000 : 2018
fssai 12417032000133
GOVERNMENT OF INDIA

கடலை மிட்டாய் | கோகோ மிட்டாய் | எள் மிட்டாய் | பொரி உருண்டை

## காரோஸ்® மரச்செக்கு எண்ணெய்

**7, சேர்மன் A. சண்முகம் ரோடு, சிவகாசி.**

தொடர்புக்கு : 73730 47255

corosoil.office@gmail.com

www.corosoil.com

# ஆசிரியர் பார்வை....

அன்பார்ந்த நேயர்களே! வணக்கம்

மனிதநேய கவசம் மாத இதழ் வாயிலாக பிரதி மாதம் தங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

குறிப்பாக... இவ்விதழில் நமக்கு பயன்பெறக்கூடிய பல தகவல்கள் இடம் பெற்றுள்ளன.


மாணவர்கள் மனநலம் பாதிக்கும் வகையில் ஆன்லைன் விளையாட்டுகள் மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி வருவதை பெற்றோர்கள் தடுக்க வேண்டும். பொதுமக்கள் செக் மோசடியிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும், தரமற்ற 215 மருந்துகள் இணையதளத்தில் வெளியாகி வருகின்றன, பொதுமக்கள் மருந்து, மாத்திரைகள் வாங்கும் பொழுது தயாரிப்பு தேதி, காலாவதி தேதியை சரிபார்த்து வாங்கவும், பால் கலப்பட உயிரிழப்பை தடுக்க வேண்டும், சமையல் எரிவாயு காப்பீட்டுத் திட்டத்தை பயன்படுத்தி கொள்ளவும், மினரல் வாட்டர் கேன்கள் வாங்கும் பொழுது நிறுவனத்தின் பெயர், முகவரி, பிராண்ட் பெயர், தொகுதி அல்லது குறியீட்டு எண், பேக்கிங் செய்யப்பட்ட தேதி, சுத்திகரிக்கப்பட்ட விவரங்கள் சரிபார்த்து வாங்க வேண்டும் என பல தகவல்கள் துறைகள் சார்ந்த செய்திகள் இடம் பெற்றுள்ளது. இவ்விதழ் அனைவரும் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளது என நம்புகிறேன்.

உணவின் அவசியத்தை நன்கு அறிந்து உணவை வீணாக்காமல் தேவைக்கேற்ப பயன்படுத்துவோம். ஆரோக்கியமான உணவைப் பெறுவதற்கு ஊட்டச்சத்துள்ள சிறுதானிய உணவுகளை நாம் அன்றாடம் உணவுப் பழக்கத்தில் பயன்படுத்துவோம்.

***மீண்டும் புதிய செய்திகளுடன் அடுத்த இதழில் சந்திப்போம்...***

- முனைவர் **ந. அசோகன்,** பதிப்பாசிரியர் (பொ)

## "எது தர்மம் ஆகும்"



- வேதத்தினால் ரிஷிகளையும்
- ஹோமத்தினால் தேவர்களையும்
- சிராார்த்ததினால் பித்ருக்களையும்
- அன்னத்தினால் அதிதிகளையும்
- மலர்களினால் பூதங்களையும்
- உழைப்பினால் தன் எஜமானனையும்
- தரிசனத்தினால் தெய்வங்களையும்
- பிரியத்தினால் பெற்றோர்களையும்
- அன்பினால் மனைவியையும்
- கண்டிப்புடன் கூடிய பாசத்தால் பிள்ளைகளையும்...

**திருப்தி செய்ய வேண்டியதே தர்மமாகும். மஹா பெரியவா**

மனிதநேய கவசம் 2 | இதழ் 7 | ஏப்ரல் 2026

நிறுவனர் மற்றும் வெளியீட்டாளர், ஆசிரியர்
முனைவர் **ந. அசோகன்** M.A.,

துணை ஆசிரியர்
Er. **மு. குமரன்** B.Tech.,

இணை ஆசிரியர்கள்
முனைவர் **க. ஜெயசங்கர்** D.M.E.,
முனைவர் **வ. சண்முகசுந்தரம்** M.A.,
திரு. **ச. குமரவேல்** B.Sc., M.A.,
(ப.நி., சுடுதல் காவல் கண்காணிப்பாளர்)
திரு. **N. சிவானந்தம்** D.M.E.,

புரவலர்கள்
முனைவர் **ப. கார்வாணன்**
முனைவர் **ப. கணேசன்**
திரு. **ரா. முருகானந்த்**
திரு. **ப. பாலாஜி**
திரு. **த. இராமச்சந்திரகுமார்** D.Pharm.,
முனைவர் **பா. சேசுராஜா** M.Sc., B.Ed.,
திரு. **காந்திலால் D. பட்டேல்**
திரு. **ச. ராமசுப்ரமணியன்**
திரு. **க. ஜெயசீலபாண்டியன்**

உதவி ஆசிரியர்கள்
முனைவர் **சு. முருகன்**
M.A.,M.A.,M.A.,M.Ed.,M.Phil.,Ph.D.,PGDJMC, DTE
திரு. **நீ.கி. கார்த்திக்** B.C.A.,
திரு. **ச. தாமோதரன்**

நிர்வாக மேலாளர்
திருமதி. **கோ. ஜெயலெட்சுமி** B.B.A.,

சிறப்பு நிருபர்
திரு. **சி. குட்லக் முருகன்** D.F.S.,
திரு. **R. முருகன்** B.A.,

புகைப்பட கலைஞர்
திரு. **ச. ராஜாகண்ணன்** D.M.E.,
திரு. **ரா. சுரேஷ்**

சட்ட ஆலோசகர்கள் மதுரை உயர்நீதி மன்ற வழக்கறிஞர்
திரு. **ஜோ. அழகுராம் ஜோதி** M.A.,B.L.,
திரு. **இரா. செல்வராஜ்** B.Sc.,B.L.,

வெளியீட்டாளர் அலுவலக முகவரி :
மனிதநேய கவசம் மாத இதழ்
இ-331/48, மீனாட்சி ரோடு, TVS நகர்,
மதுரை - 625 003.

பிரிண்ட் பெயர் மற்றும் முகவரி :
Dr. **இரா. கண்ணன்** M.D.(E),
**சுந்தரராஜா பிரிண்டர்**
25B, R.M.S. காலனி, 4வது கிராஸ் தெரு,
முத்துப்பட்டி, மதுரை - 625 003.

இணையதளம் உருவாக்கம்
திரு. **மு. குட்டிசங்கர்** B.Sc.,M.B.A.,
Ungal.com

தொலைபேசி எண் :
98650 91526, 99525 33887
மின்னஞ்சல் :
hpo.kavasam@gmail.com, www.hpokavasam.org

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே, விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு 'மனிதநேய கவசம்' பொறுப்பல்ல

Subject to Madurai Jurisdiction

# இதழின் உள்ளே...

மாணவர்கள் மனநலத்தை பாதிக்கும் ஆன்லைன் விளையாட்டுகள், பெற்றோர்கள் கவனத்தில்... ....................... 5 to 6

செக் மோசடி : பாதுகாப்பாக இருந்துக்கோங்க ! ................................. 7 to 8

நுகர்வோர் சட்டங்களும், பாதுகாப்பும்... ...... 9 to 11

தரமற்ற 215 மருந்துகள் இணையதளத்தில் வெளியீடு ..................... 12

பால் கலப்படத்தால் உயிரிழப்பு ................. 12 to 13

சமையல் எரிவாயு காப்பீட்டுத்திட்டம் .......... 14 to 15

மினரல் வாட்டர்... பாதுகாப்பானதா ? ........ 16 to 18




Director, **M. Kutti Sankar** B.Sc.,M.B.A.




Director@ungal.com

# மாணவர்கள் மனநலத்தை பாதிக்கும் ஆன்லைன் விளையாட்டுகள், பெற்றோர்கள் கவனத்தில்...



விதவிதமான ஆன்லைன் விளையாட்டுகள் உருவாக்கப்பட்டு மாணவர்களை அடிமைப்படுத்தி, அவர்களை குற்றவாளிகளாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அலைபேசியை தகவல் தொடர்புக்கு மட்டுமின்றி பல்வேறு விஷயங்களுக்கும் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது. இதனால் பல்வேறு சிக்கல்களும் ஏற்படுகின்றன. குறிப்பாக ஆன்லைன் விளையாட்டுகள் மாணவர்களை திசைதிருப்பி குற்றவாளிகளாக மாற்ற முயற்சிக்கின்றன.

துவக்கத்தில் பிற விளையாட்டுகள் போலத்தான் ஆன்லைன் விளையாட்டுகளும் இருக்கின்றன. பள்ளியில், கல்லூரியில் இருக்கும் மாணவர்கள் சிலர் அவரவர் இடத்திலிருந்து ஒன்றிணைந்து விளையாட துவங்குகின்றனர். பின்னர் படிப்படியாக அவர்களுக்கு 'டாஸ்க் தரப்படுகிறது. முதலில் எளிமையான 'டாஸ்க்'குள் தரப் படும். இந்த கேமில் ஜெயித்தால் இத்தனை டைமண்ட் பாயின்ட் என துவங்கும்.

ஆசைகாட்டி படிப்படியாக டாஸ்க் அதிகரிக்கப்படும். பின்னர் வன்முறை பாதைக்கு மாறுகிறது. உடன் உள்ள நண்பரை டீஸ் செய்ய டாஸ்க் தரப்படுகிறது. அதில் துவங்கி அவரை கொலை செய்யவும் தூண்டுகிறது. கொலைக்கான கருவிகளாக துப்பாக்கி, வில் அம்பு போன்றவற்றை அந்த ஆன் லைன் விளையாட்டு நிறுவனமே விற்கிறது. இதை வாங்க சில டைமண்ட் பாயின்ட்கள் தேவை. அவற்றை வாங்க பணம் செலுத்த வேண்டும். இவ்வளவு கட்டணம் செலுத்தினால் இவ்வளவு டைமண்ட் பாயின்ட் என வைத்துள்ளனர். ஆரம்பத்தில் அதுவும் குறைந்த விலைக்கு தரப்படும். அதன்பின் ஒவ்வொரு ஸ்டேஜாக இவர்கள் முன்னேற முன்னேற டைமண்ட் பாயின்ட்களின் விலை அதிகரிக்கிறது.

ஆரம்பத்தில் பெற்றோர் சிறிய தொகை தானே என பிள்ளைகளுக்கு கொடுக்கின்றனர். தொகை அதிகரிக்கும் போது மறுக்கின்றனர். விளையாட்டுக்கு அடிமையாகி விட்ட மாணவர்களோ வீட்டில் இருந்தும். ஏ.டி.எம். கார்டு மூலமும் பணத்தை திருடி டைமண்ட் பாயின்ட்களை வாங்குகின்றனர்.

அவரவர் அலைபேசியை விளையாட பயன்படுத்தினாலும் விளையாடுவதற்கு தனியாக ஐடி பாஸ்வேர்டு உண்டு.

அதற்கான கட்டணமும் தனியாக ரீசார்ஜ் மூலம் செய்ய வேண்டும். இவர்களுக்கு பெற்றோரால் வழங்கப் பட்டுள்ள அலைபேசியில் இருந்து விளையாட்டுக்கு ரீசார்ஜ் செய்தால் தெரிந்து விடும் என்பதால் வீட்டில் இருந்து பணத்தை திருடி அலைபேசி கடைகளில் ரீசார்ஜ் செய்கின்றனர்.

சில அலை பேசி கடைகள் இதையே முழு நேர தொழிலாக செய்கின்றனர்.

அதில் அவர்களுக்கு பெரும் வருமானம் கிடைக்கிறது. 200 ரூபாய் பெற்றுக்கொண்டு 160 ரூபாய்க்கு ரீசார்ஜ் செய்கின்றனர். விளையாட்டுக்கு அடிமையான வெறியால் மாணவர்களும் கண்டு கொள்வதில்லை. பல நாட்களுக்கு பிறகு பெற்றோருக்கு தெரியும் போது நிலைமை எல்லை மீறி போய்விடுகிறது. படிப்பு, பிற செயல்பாடுகள் என அனைத்தும் பாதிக்கப்பட்டு மாணவர் மனநோய் பாதித்தவர் போன்று மாறிவிடுகிறார்.

எனவே தங்கள் குழந்தைகளிடம் அலைபேசியை தரும் பெற்றோர் அதில் அவர்களின் செயல்பாடு களை தொடர்ந்து கண்காணித்தால் மட்டுமே இதுபோன்ற பிரச்சனைகளில் இருந்து தப்ப முடியும்.

மாணவர்களை மனநோயாளியாக்கும் இதுபோன்ற விளையாட்டுளுக்கு ரீசார்ஜ் செய்யும் அலைபேசி கடைகளுக்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## போதையும் விற்பனை

விளையாட்டுக்குகளுக்கு ஒவ்வொரு டாஸ்க்காக தரப்படும். அதில் இவர் குறிப்பிட்ட இடத்திற்கு சென்று அங்கு ஒருவர் தரும் பொருளை பெற்று அதை மற்றொருவரிடம் ஒப்படைப்பதும் ஒரு டாஸ்க். இதில் கொடுப்பவர் யார். கொடுத்தது என்ன, பெற்றுக் கொண்டவர் யார் என எதுவுமே அந்த மாணவனுக்கு தெரியாது. இதன் மூலம் கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்கள் அனுப்பப்படுகின்றன. அடிமையான மாணவர்

அண்மையில் மதுரையில் ஒரு பள்ளியில் மாணவரின் பையில் சோதனை செய்தபோது சுஞ்சா பொட்டலங்கள் இருந்தன. அவரிடம் விசாரித்தபோது டாஸ்க் விஷயமும் அதை பள்ளிக்கு வெளியே நின்ற ஒருவர் கொடுத்ததும் தெரியவந்தது. தன்னிடம் இருக்கும் பொட்டலத் தில் இருப்பது கஞ்சா என்ற விபரமே மாணவருக்கு தெரியவில்லை. இந்த டிரான்ஸாக்ஷவை முடித் தால் எனக்கு 50 டைமண்ட் பாயின்ட் கிடைக் கும், அதனால் செய்தேன் என அப்ப ாவியாக மாணவர்கள் கூறியதும் ஆசிரியர்கள் அதிர்ச்சியில் உறைந்துவிட்டனர். மாணவர் நலன், பள்ளியில் பெயர் கெடும் என்பதால் இதை அப்படியே முடி மறைத்தும் விட்டனர்.

# செக் மோசடி : பாதுகாப்பாக இருந்துக்கோங்க !





திரு. **இரா. செல்வராஜ்** B.Sc.,B.L.,
உயர்நீதிமன்ற வழக்கறிஞர், மதுரை
72000 70024

காசோலை கொடுத்தவர் காசோலை தேதியிட்டு வழங்குகிறார். காசோலை வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் அதை காசோலை பெற்றவர் வங்கி கணக்கில் போட்டு பணத்தை வசூலிக்க வேண்டும். காசோலை பெற்றவர் அதனை வங்கியில் போடுகிறார். வங்கியில் காசோலை கொடுத்தவர் அக்கவுண்டில் பணம் இல்லை என்று அந்த காசோலை திருப்பித் தரப்பட்டு, வங்கியில் இருந்து அதற்கான மெமோ காசோலை பெற்றவரிடம் வழங்கப்படுகிறது.

### சட்ட அறிவிப்பு வழங்க வேண்டும்:

காசோலை வழங்கியவர் கணக்கில் பணம் இல்லை என்று காசோலை திரும்பி வந்து வங்கி அதற்கான மெமோ வழங்கும்பட்சத்தில், அந்த மெமொ பெற்ற தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் காசோலை வழங்கியவருக்கு ஒரு சட்டப்படியான அறிவிப்பை காசோலையை பெற்றவர் வழங்க வேண்டும். இந்த அறிவிப்பு வழங்குவது மிக கட்டாயமானதாகும்.

### என்ன செய்ய வேண்டும்?

காசோலையை கொடுத்தவருக்கு முறைப்படி சட்ட அறிவிப்பை காசோலையை பெற்றவர் அனுப்புகிறார். அறிவிப்பு வழங்கிய பின்னர் காசோலை கொடுத்தவர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட தேதியில் இருந்து 15 நாட்களுக்குள் பணத்தை திருப்பி அளிக்க வேண்டும். 15 நாட்கள் ஆகிவிட்டது. ஆனால், காசோலை கொடுத்தவர் பணம் தரவில்லை. காசோலை வழங்கியவருக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பான 15 நாட்கள் முடிந்ததும், அதன்பின்னர் 30 நாட்களுக்குள் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கை காசோலை பெற்றவர் தாக்கல் செய்யலாம். இந்த கால அளவில் ஏதாவது தவறு ஏற்பட்டால், காசோலை மோசடி வழக்கு தொடர முடியாது.

### என்ன செய்யக்கூடாது ?

உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட தேதியில் வழங்கப்பட்ட காசோலையை வங்கியில பணம் வசூலிக்க காசோலை பெற்றவர் தாக்கல் செய்கின்றார். காசோலை கொடுத்தவர் கணக்கில் பணம் இல்லை என்று வங்கியாளர் காசோலையை பெற்றவரிடம் தெரியப்படுத்துகின்றார். காசோலை கொடுத்தவரை, காசோலை பெற்றவர் தொடர்புகொண்டால், சற்று பொறுத்துகொள்ளுங்கள். இன்னும் ஒரு மாதத்தில் பணத்தை கொடுத்து விடுவேன் என்கின்றார். அவர் பேச்சை கேட்டு காசோலை பெற்றவர் சட்டப்படியான நோட்டிஸ் 30 நாட்களுக்குள் அனுப்பாமல்

இருக்கிறார். ஒரு மாதம் கழிகின்றது. பணம் தரவில்லை, பணத்தை கேட்டால், காசோலை கொடுத்தவர் பணம் கொடுக்கமறுக்கின்றார். 30 நாட்களுக்குள் சட்டப்படியான அறிவிப்பு அனுப்பவில்லை என்பதால் இப்போது திரும்பி வந்த காசோலையை வைத்து வழக்கிட முடியாது.

**இப்போது, என்ன செய்யவேண்டும்?**

காசோலையை தாக்கல் செய்வதற்கான கால அளவு குறிப்பிட்ட தேதியில் இருந்து மூன்று மாதம் வரை இருப்பதால், திரும்பவும் ஒரு முறை அந்த காசோலையை பெற்றவர் வங்கியில் தாக்கல் செய்ய வேண்டும். அது திரும்பி வந்த பிறகு, உடனடியாக காசோலையை கொடுத்தவருக்கு சட்ட அறிவிப்பு அனுப்ப வேண்டும். அனுப்புகின்ற அந்த சட்ட அறிவிப்பில் முதலாவதாக பணம் வசூலிக்க காசோலை வங்கியில் போட்ட விபரத்தையும், காசோலை திரும்பி வந்த விபரத்தையும். காசோலையை கொடுத்தவர் பணத்தை ஒரு மாதத்துக்குள் தருவதாகக் கூறியதால் சட்டப்படியான அறிவிப்பு வழங்காமல் இருந்ததையும் தெளிவாக அதில் குறிப்பிடவேண்டும்.

பணத்தை வசூலிக்க குறிப்பிட்ட தேதியில் இருந்து மூன்று மாதம் எத்தனை முறை வேண்டுமானாலும் வங்கியில் அந்தக் காசோலையை தாக்கல் செய்யலாம். காசோலை திரும்பி வந்ததும் சட்ட அறிவிப்பு வழங்கலாம். ஆனால், கடைசி 15 நாட்கள் இருக்கும் போது தாக்கல் செய்து, காசோலை திரும்பி வந்தால், காசோலையை வழங்கியவர் சொல்லும் கதைகளை (பணத்தை இன்னும் ஒரு மாதத்தில் திருப்பி கொடுத்துவிடுவேன்) கேட்காமல் சட்ட அறிவிப்பு வழங்குவது நல்லது. அல்லது காசோலை வழங்கியவர் மீது நம்பிக்கை இருக்கும்பட்சத்தில், புதிதாக ஒரு காசோலையை அவரிடம் பெற்ற பிறகே, அவர் தமக்கு பணத்தை கொடுக்க வாய்ப்பளிக்கலாம்.

**காசோலை அளித்தவர் இறந்து விட்டால்?**

வாடிக்கையாளருக்கும், வங்கிக்கும் உள்ள உறவு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்பட்டதாகும். வாடிக்கையாளர் இறந்துவிட்டால், அதன் பின்னர் வங்கியானதுவாடிக்கையாளரின் கணக்கில் இருந்து பணத்தை கழிக்க முடியாது. வாடிக்கையாளர் இறந்துவிட்டார் என்று வங்கி காசோலையை திருப்பி அனுப்பினாலும், அதன் அடிப்படையில் காசோலை மோசடி வழக்கிடமுடியாது ஏனெனில் சட்டப்படியான அறிவிப்பை காசோலை வழங்கியவருக்கு மட்டுமே அனுப்பவேண்டும். மேலும், இறந்தவர் மீது குற்றவியல் வழக்கு தொடர முடியாது. ஆனால், காசோலை கொடுத்தவரின் வாரிசுதாரர்கள் மீது சிவில் வழக்கு போடலாம். இறந்தவர் ஏதாவது சொத்தை விட்டு சென்றால் அந்த சொத்தின் மீது நீதிமன்றத்தின் வாயிலாக உரிமை கோர்கலாம். இறந்தவருக்கு எந்தவித சொத்தும் இல்லை யென்றால் இறந்தவர் கடனை அடைக்க அவரின் வாரிசுதாரர்கள் கடமை பட்டவர்கள் அல்ல. வாரிசு தாரர்களின் கடமையானது இறந்தவரின் சொத்தில் அடையும் உரிமை அளவே ஆகும்.

# நுகர்வோர் சட்டங்களும், பாதுகாப்பும்...






முனைவர் **ந. அசோகன்**
மதுரை

இந்தியாவில் 1986-ஆம் ஆண்டு டிசம்பர் 24-ஆம் தேதி நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. 2015-ஆம் ஆண்டின் நுகர்வோர் பாது காப்புச் சட்டமும் 2016-இல் இயற்றப்பட்ட இந்திய தர நிர்ணய வாரியச் சட்டமும், நுகர்வோர் மேலும் பயன்பெறுவதற்குரிய சட்டங்களாகும்.

தேவையான பொருள்களைத் தேர்வு செய்யும் முறை; அனைத்து வகையான பாதிக்கப்பட்ட அல்லது அபாயகரமான பொருள்களிலிருந்தும் தம்மைப் பாது காத்துகொள்ளும் உரிமை; அனைத்து வகையான பொருள்களின் தரம், செயல் பாடு குறித்து தெரிந்து கொள்வதற்கான உரிமை: நுகர்வோர் நலன்கள் குறித்து அனைத்து முடிவெடுக்கும் நடைமுறை களிலும் கேட்கப்படும் உரிமை நுகர்வோர் உரிமைகள் மீறப்படும்போது அதற்கான தீர்வைப்பெறும் உரிமை நுகர்வோர் கல்வியை நிறைவு செய்வதற்கான உரிமை என நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் வழங்கிய உரிமைகள் வகைப்படுத்தப்பட் டுள்ளன.

நம் நாட்டில் 22% முதல் 25% மக்களிடம் மட்டுமே நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் குறித்து விழிப்புணர்வு உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள்: குறைதீர் மன்றங்கள் குறித்தும், அவற்றில் புகார்களை எவ்வாறு பதிவு செய்வது என்பது குறித் தும் பலருக்குத் தெரிவதில்லை.

பொருள்களை வாங்கியதற்கான ரசீது கள், ஒப்புதல் கடிதங்கள் போன்றவற்றை பாதுகாக்காததால், புகார்களைப் பதிவு செய்வதில் சிக்கல் ஏற்படுகிறது. அது மட்டுமல்லாமல், இழப்பீடு பெறுவது சிரமம் என்கிற எண்ணமும் உள்ளது. பலரும் புகார் அளிப்பதற்கு காட்டும் ஆர்வத்தை வழக்குத் தொடுப்பதில் காட்டுவதில்லை.

புகார்கள் மீது உடனடியாகத் தீர்வு காண்பதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. தமிழகத்தில் உள்ள பல நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் பணியாளர் பற்றாக்குறை உள்ளது. போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லை. இதைக் கருத்தில் கொண்டே நுகர்வோர் நலனில் அரசுக்கு அக்கறை இல்லை எனச் சென்னை உயர்நீதிமன்றம் அண்மையில் தெரிவித்தது.

ஒரு புகாரை 90 நாள்களுக்குள் விசாரித்து முடிக்குமாறு நுகர்வோர் பாது

காப்புச் சட்டம் கூறுகிறது. ஆனால், தீர்வு கிடைக்க ஓராண்டிலிருந்து ஐந்தாண்டுகள் வரை ஆகலாம் என்பதே தற்போதைய நிலை. 2024 ஜூலை 31 நிலவரப்படி நாட்டில் உள்ள நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் 50.258 வழக்குகள் நிலுவையில் உள்ளன. தமிழகத்தில் 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் சுமார் 4.000 வழக்குகள் நிலுவையில் உள்ளன. தீர்ப்பு அமலாக்கம் செய்யப்படுவதைப் பொருத்தே நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் வெற்றி அமைகிறது.

நுகர்வோர் பெறும் பொருள்கள். சேவைகளில் குறைபாடுகள் இருந்தால் இரண்டு ஆண்டுகள் வரை புகாரைப் பதிவு செய்யலாம். அவை 90 நாள்களுக்குள் தீர்க்கப்பட்ட வேண்டும். இது குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்தப் படவேண்டும்.

இந்திய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் என்பது மக்களின் நுகர்வுத் தன்மையை பாதுகாப்பதற்காக மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சட்டம் டிசம்பர் 1986 - 1987 முதல் அமலுக்கு வந்தது. 1991, 1993-ஆம் ஆண்டுகளில் திருந்தச் சட்டங்களாக வெளிவந்தன.

இதன் மூலம் நுகர்வோர் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் அதன் செயல் பாடுகளும் முக்கியத்துவங்களும் அதிகரிக்கப்படும் என்கிற நோக்கத்தில் டிசம்பர் 2002-இல் புதிய திருத்தச் சட்டங்கள் அர சால் அறிமுகப்படுத்தப்பட்டு, 2003 மார்ச் 15-இல் புதிய பரிமாணங்களுடன் அமலுக்கு வந்தது. இதுபோல அறிமுகப்படுத்தப்பட்ட விதிகள் நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் என்று அழைக்கப்படுகின்றன.

நுகர்வோர் பிரச்சனைகள், சேவைக்குறைபாடுகள், வணிக நடைமுறைகள், நேர்மையற்ற வணிக முறைகள் போன்றவற்றுக்கு தீர்வு தரும் சட்டமாக நுகர்வோர் சட்டங்கள் உள்ளன. நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார்தாரரே புகாரைத் தாக்கல் செய்து அவரே வாதிட்டு நீதி பெற முடியும்.

நுகர்வோர் பெறும் பொருள்கள் மற்றும் சேவைகளில் ஏதேனும் குறைபாடுகள் அல்லது புகார்கள் இருந்தால் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் குறை தீர் ஆணையம் மூலம் இழப்பீடு பெற முடியும்.

மேலும், எம்ஆர்பி குறிப்பிடாமல் பொருள்களை விற்பது. எம்ஆர்பி-க்கு அதிகமாக பொருள்களை சேவைகள் மற்றும் காப்பீடு நிறுவனத்தில் சரியாக காப்பீடுகள் வழங்காமல் இருப்பது, தனியார் மருத்துவ சேவைகளில் ஏற்படும் குறைகள், வங்கிப் பரிவர்த்தனைகளில் ஏற்படும் புகார்கள் போன்றவற்றுக்கு குறைதீர் ஆணையம் மூலம் நிவாரணம் பெறமுடியும்.

நுகர்வோரைக் குறிவைத்து சந்தைகள்

இயங்குவதை எப்போதும் மனதில் கொள்ள வேண்டும். நுகர்வோரைக் கவரும் விதத்தில் வியாபார உத்திகளைக் கையாண்டு, விற்பனையை அதிகரிக்கச் செய்து லாபம் பார்ப்பதை எல்லா நிறுவனங்களும் செய்து வருகின்றன. இந்த வலையில் நுகர்வோர் விழாமல் தரமான தேவையான பொருள்களை வாங்க பழகிக்கொள்ள வேண்டும். வாங்கும் பொருள்களுக்காக ஏதேனும் ஆவணங்களில் கையொப்பமிட வேண்டியிருப்பின், அதில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை படித்துப் பார்த்த பிறகு கையொப்பமிடுவது எதிர்காலத்தில் தேவையற்ற சிக்கல்களுக்கு வழிவகுக்காது. மேலும், விலை மிகுந்த பொருள்களை வாங்கியதும் அதற்கான ரசீதுகள் உள்ளிட்டவற்றை பாதுகாப்பது நல்லது. நுகர்வு கலாசாரத்துக்குள் சிக்காமல் தேவையான நேரத்தில், தேவையான பொருள்களை வாங்கி புத்திசாலியான நுகர்வோராக திகழ வேண்டும். சேவைக் குறைபாடுகளுக்கு தீர்வு கிடைக்க நுகர்வோர் மன்றங்களின் கதவுகளைத் தட்டவும் தயங்கக் கூடாது.



ஒரு துணியைத் தண்ணீரில் நனைத்து, நன்றாகப் பிழிந்து, சிலிண்டரை மேலிருந்து கீழ் நோக்கி ஒரு முறை துடைக்கவும். அது உலரும் வரை காத்திருக்கவும். இப்போது துடைத்த இடத்தில், கேஸ் இல்லாத பகுதி வேகமாக உலரும். கேஸ் இருக்கும் பகுதி சற்று ஈரப்பதத்துடன் அப்படியே இருக்கும். எதுவரை கேஸ் இருக்கிறது என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

சிலருக்குப் பாதங்களில் வெடிப்புகள் ஏற்பட்டு, விகாரமாக இருக்கும்; நடந்தால் வலிக்கும். இதை, பித்த வெடிப்பு என கவனிக்காமல் விட்டு விடுவர், சிலர். பாத வெடிப்பு உள்ளவர்கள் வெதுவெதுப்பான வெந்நீரில் பாதங்களைச் சிறிது நேரம் வைத்திருக்கவும். அதன் பின் பாதங்களை நன்கு துடைத்து, ஒரு தேக்கரண்டி கிளிசரின், ஒரு தேக்கரண்டி பன்னீர், இரண்டு தேக்கரண்டி எலுமிச்சைச் சாறு கலந்த கலவையை வெடிப்புகள் மீது பூசி வர , வெடிப்புகள் காணாமல் போகும்.



S.Suresh Call : 98421 50793 , 88383 95692

# தரமற்ற 215 மருந்துகள் இணையதளத்தில் வெளியீடு



மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விற்பனையகங்களில் நடந்த சோதனையில், 215 மருந்துகள் தரமற்றவை என்பதும், மூன்று மருந்துகள் போலி என்பதும் தெரியவந்துள்ளதாக, மத்திய மருந்து தரக்கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

அனைத்து வகையான மருந்து, மாத்திரைகளும் மத்திய மற்றும் மாநில மருந்து தரக்கட்டுப்பாட்டு வாரியங்கள் வாயிலாக ஆய்வு செய்யப்படுகின்றன. அதேபோல், போலி மருந்துகளும் கண்டறியப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அதன்படி, கடந்த மாதத்தில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்து மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் காய்ச்சல், சளித் தொற்று, கிருமித் தொற்று, ஜீ ரண ம ண் டல ப ாதி ப் பு உள்ளிட்டவற்றுக்கான, 215 மருந்துகள் தரமற்றவையாகவும், மூன்று மருந்துகள் போலியானதாகவும் இருந்தது கண்டறியப்பட்டது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு விளக்கம் கேட்டு, 'நோட்டீஸ்' அனுப்பப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அந்நிறுவனங்கள் மீது நட வடிக்கை எடுக்கப்பட உள்ளது. இந்த மருந்து விபரங்கள், மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியத் https://cdsco.gov.in என்ற இணையதளத்தில் வெளியிட்டுள்ளது.

இவற்றை பொதுமக்கள் பார்த்து விழிப்புணர்வுடன் செயல்படலாம் என்று, மருந்து கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

# பால் கலப்படத்தால் உயிரிழப்பு




அண்மையில் ஆந்திர மாநிலத்தில், கலப்படம் செய்யப்பட்ட பாலை அருந்தியதால் 6 பேர் உயிரிழந்த சம்பவம், நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உணவுப் பாதுகாப்பு தரநிலைக் கண்காணிப்பு உரிய வகையில் செயல்படுத்தப்படுகிறதா என்னும் கேள்வியையும் எழுப்பியுள்ளது. கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள ராஜமகேந்திரவரத்தில் இந்த சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. பத்துக்கும் மேற்பட்டோர் கவலைக்கிடமாக இருக்கும் நிலையில், பால் விற்பனை செய்த நபர் விசாரணை வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறார். அவர் விநியோகித்த கலப்படப் பாலைப் பயன்படுத்திய 110 குடும்பங்களைச் சேர்ந்த 315 பேரிடம் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய சம்பவங்கள் புதிதல்ல.

2008இல் ஜார்க்கண்ட் மாநிலத்தின் பள்ளியொன்றில் கலப்படப் பாலை அருந்திய 6 குழந்தைகள் மரணமடைந்தது ஓர் உதாரணம். கலப்படமான பாலைப் பயன்படுத்தியதால் செரிமானப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகளால் மக்கள் அவதிப்படுவது அவ்வப்போது செய்திகளில் இடம்பெற்றுவருகிறது.

உலக அளவில் பால் உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிக்கிறது; நாட்டின் பொருளாதாரத்தில் 5% பங்களிப்பைப் பால் உற்பத்தி வழங்குவதோடு 8 கோடிக்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பையும் அளிக்கிறது. தொழில்நுட்ப மேம்பாடுகளால் பால் உற்பத்தித் திறன் வெகுவாக அதிகரித்தாலும், அதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு கலப்படம் செய்பவர்களின் எண்ணிக்கையும் பெருகியிருப்பது கவலைக்குரியது. 2011இல் உணவுப் பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையத்தால் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பால் மாதிரிகளில் 68%, தரநிலைகளைப் பூர்த்திசெய்யவில்லை எனக் கண்டறியப்பட்டது. குஜராத்தின் சபர்கந்தாவில் செயல்பட்டுவந்த ஸ்ரீ சத்யா டெய்ரி பிராடக்ட்ஸ் நிறுவன ஆலையில், கடந்த 5 ஆண்டுகளாக வேதிப் பொருள்களைப் பயன்படுத்திச் செயற்கையான முறையில் பால், மோர் தயாரிக்கப்ப ட்டது அண்மையில் வெளிச்சத்துக்கு வந்தது. ஏறக்குறைய 300 லிட்டர் பாலைப் பயன்படுத்தி 1,800 லிட்டர்வரை செயற்கைப்பால் அங்கு தினமும் தயாரிக்கப்பட்டது கண்டறியப்பட்டது. ஒருகாலத்தில் பாலில் தண்ணீர் கலப்பதே கலப்படமாகக் கருதப்பட்டது. பின்னர் அந்தப் பாலின் அடர்த்தியை, அதிகரித்துக் காட்டுவதற்காக ஸ்டார்ச் சர்க்கரை தொடங்கி சோயாபீன் எண்ணெய், சமையல் சோடா, கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் எனப் பலவகையில் கலப்படம் மேற்கொள்ளப்பட்டது.

பார்மலின், ஹைட்ரஜன் பெராக்சைடு, எத்திலீன் கிளைக்கால் போன்ற வேதிப்பொருள்களால் மோசமான பக்கவிளைவுகள் ஏற்படும் என்பது தெரிந்திருந்தும், அதிக லாபத்தைப் பெறும் நோக்கில் அவற்றைப் பாலில் கலப்பது தொடர்ந்துவருகிறது. இவ்வாறு கலப்படம் தொடரும்போது, அதன் விளைவுகள் உடலில் ஒருநாள் தீவிரமாக வெளிப்படும் என்கின்றனர். மருத்துவர்கள். செரிமான மண்டலப் பாதிப்பு தொடங்கி, சிறுநீரகம் செயலிழப்பது. உயிருக்கு ஆபத்து விளைவிப்பதுவரை இதன் தாக்கம் உள்ளது. இவற்றைக் கருத்தில்கொண்டு, பால் உற்பத்தியில் முறைகேடு, அலட்சியம் தொடர்பான விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்துவது அரசின் கடமை. அதிகளவில் பால், பால் பொருள்கள் தொடர்பான பகுப்பாய்வுகளைச் சீரான இடைவெளியில் உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் மேற்கொள்வது அவசியம். குறைந்தபட்ச சட்டத் தரநிலைகள் பூர்த்தி செய்யப்படுகின்றனவா என்று கண்காணிப்பதும் மிக முக்கியம். அதற்கேற்றவாறு மத்திய, மாநில அரசுகள் இவ்விவகாரத்தில் நிலைத்த தீர்வுகளை நோக்கிச் செயலாற்ற வேண்டும்.

# சமையல் எரிவாயு காப்பீட்டுத்திட்டம்



சமையல் எரிவாயு உருளை இல்லாத வீடே இல்லை எனலாம். முதல் முதலில் சமையல் எரிவாயு அறிமுகப் படுத்தப்பட்டபோது சிலிண்டர் வெடித்து விடுமோ என்று பலரும் அஞ்சினர். படிப்படியாக அச்சம் விலகி அனைவரும் சகஜமாக புழங்கும் ஒரு நுகர்பொருளாக மாறிவிட்டது. எப்படி இருந்தாலும் சிறு அஜாக்கிரதை விபத்தை ஏற்படுத்தக் கூடும்.

சிலிண்டரில் இருந்து அடுப்புக்கு இணைப்புக் கொடுக்க யாராவது பச்சைக் கவரில் வந்த பழைய ரப்பர் குழாயை பயன்படுத்தினால், உடனே எரிவாயு விநியோகஸ்தரை சந்தித்து சுரக்ஷா என்ற பெயரில் விற்பனை செய்யப்படும் காவிக் கலரில் உள்ள ரப்பர் குழாயை வாங்கி பொருத்தித் தர கேட்கவும். சுரக்ஷா குழாயை எலி கடிக்க முடியாது. அந்தக் குழாய் உள்ளே 110 அடுக்குகள் கொண்டது. உள்ளே உறுதியான ஸ்டீல் கம்பியால் ஆன அடுக்கு ஒன்று உள்ளது. ஆக, உங்கள் வீட்டில் சுரக்ஷா குழாயைப் பயன்படுத்துவதை உறுதி செய்து கொள்ளவும்.

இரண்டாவது, சிலிண்டர் மாற்றும் போது கவனிக்க வேண்டியது. சிலிண்டரின் மேல் பகுதியில் உள்ள பித்தளை வால்வுக்கு உள்ளே ஒரு ரப்பர் 'ஓ' ரிங் இருக்கும். அந்த 'ஓ' ரிங் காயம்பட்டு இருந்தாலோ அல்லது பழுதாக இருந்தாலோ நீங்கள் ரெகுலேட்டரைப் பொருத்திய பிறகு எரிவாயு கசிவு ஏற்பட வாய்ப்பு உண்டு.

ஒவ்வொரு முறையும் சிலிண்டர் மாற்றும் போது எச்சரிக்கையோடு கவனிக்க வேண்டும். காது கொடுத்து உன்னிப்பாகக் கேட்டால் சமையல் எரிவாயு கசிவு இருப்பின் கேட்க முடியும். அப்படி இருந்தால் விநியோகஸ்தரை அழைத்து மாற்றித்தர புகார் செய்யவும்.

ஒவ்வொரு முறை சமையல் எரிவாயு நிரப்பும் முன்பு அனைத்து சிலிண்டருக்கும் புதிய 'ஓ' ரிங் மாற்ற வேண்டும் என்று எரிவாயு நிறுவனங்களுடன் தொடந்து முறையிட்டு வருகிறோம். ஆனால், எண்ணெய் நிறுவனங்களும் பொருட்படுத்துவதில்லை.

இரவு படுக்கச் செல்லும் முன்பு ரெகுலேட்டரை மூடி வைப்பது நல்லது. குறைந்தபட்சம் மூடிய சமையல் அறையில் காலை கதவைத் திறந்தவுடன் எந்த சுவிட்சையும் போடாமல் எரிவாயு கசிவு குறித்து அதன் வாசனையை வைத்து உணர முடியும். அவ்வாறு தெரிய வந்தால் கதவு, ஜன்னல் போன்றவற்றை முழுமையாகத் திறந்து வைத்து விட்டு சிலிண்டரை அப்புறப்படுத்த வேண்டும். தேவைப்பட்டால் உடனடி உதவிக்கு எரிவாயு விநியோகஸ்தரை அழைக்கவும்.

இது போன்ற சந்தர்ப்பங்களில் லைட், ஃபேன் போன்ற எந்த ஒரு மின் சுவிட்சையும் போடவோ. அணைக்கவோ கூடாது. ஏனெனில், ஒவ்வொரு முறையும் சுவிட்ச் போடும் போதும், அணைக்கும் போதும் சுவிட்ச் உள்ளே மிகச்சிறிய ஸ்பார்க் ஏற்படும். அந்த ஸ்பார்க் கசிந்துள்ள எரிவாயு தீப்பிடிக்க ஏதுவாகும்.

சிலிண்டர் கொண்டு வருபவர் எரிவாயு சிலிண்டர் ரீஃபில்லை வீட்டு வாசலில் வைத்து விட்டுச் சென்று விடுகிறார். சீல் உடன் உள்ள அந்த சிலிண்டரை நாம் பயன்படுத்திவரும் எரிவாயு சிலிண்டர் தீர்ந்தபோது தான் எடுக்கிறோம்.

எரிவாயு விநியோகஸ்தரிடம் எரிவாயு கசிவை பரிசோதிக்க கருவி உள்ளது என்பது நம்மில் பலருக்கும் தெரியாது. (அவரிடம் ஒரு எடை மிஷினும் இருக்க வேண்டும். சரியான எடையில் உள்ளதா என்பதை பரிசோதிக்க, நாம் கேட்க உரிமை உள்ளது).

எரிவாயு சிலிண்டர் தீ பிடித்தால் உயிருக்கும் உடைமைக்கும் பெருத்த சேதத்தை ஏற்படுத்தும். ஒவ்வொரு சிலிண்டரையும் நீக்கி, ரீஃபில் வாங்க பதிவு செய்த உடனே அந்த சிலிண்டரின் காப்பீடு அமலுக்கு வருகிறது. சமையல் எரிவாயு பயன்படுத்துபவர்கள் குடும்ப உறுப்பினர்கள் பயன்பெறும் விதத்தில் ரூ. 50 லட்ச அளவுக்குக் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் காப்பீடு வசதிக்கு நீங்கள் எந்தவித பிரிமியமும் செலுத்த வேண்டியதில்லை.

இந்தக் காப்பீடு திட்டத்தில் உங்கள் குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் பலன் உள்ளது. நபர் ஒன்றுக்கு ரூ.10 லட்சம் வரை, அதிகபட்சம் ரூ.50 லட்சம் வரை காப்பீடு தொகை கிடைக்கும்.

உடைமைகள் இழப்பீடுக்கு ரூ.2 லட்சம் வரையும், தனிநபர் மரண விபத்துக்கு இரு நபருக்கு ரூ.6 லட்சம் வரையும், மருத்துவ சிகிச்சை பெற அதிகபட்சம் ரூ.30 லட்சம் வரையும், நபர் ஒருவருக்கு ரூ.2 லட்சம் வரையும் இழப்பீடு பெற வசதி உண்டு. இதன் காப்பீடு குறித்த ð(MyLPG.IN (https://mylpg.in) என்ற இணையதளத்தில் சென்று அறிந்து கொள்ளலாம்.

# மினரல் வாட்டர்... பாதுகாப்பானதா ?



கடந்த அக்டோபர் மாத தொடக்கத்தில், உத்தரப்பிரதேசத்தின் பாப்நாத் மாவட்ட ஆட்சியர் திரு. ஜித்தேந்திர பிரதாப் சிங் கலந்துகொண்ட அலுவல் கூட்டத்தில் பிஸ்லெரி என்று பெயரிடப்பட்ட தண்ணீர் பாட்டில் அவரது மேஜையில் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து உடனடியாக அது குறித்து விசாரணை மேற்கொள்ளுமாறு உணவுப் பாதுகாப்புத் துறைக்கு உத்தரவிட்டார்.

விசாரணையில், அந்தத் தண்ணீர் பாட்டில்களில் இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் **(FSSAI)** முத்திரை இல்லை என்பதும் பாப்நாத் மாவட்டத்தில் உள்ள கௌரியூர் நிவாடா கிராமத்தில் உள்ள ஒரு கடையில் இது விற்கப்பட்டு வந்ததும் தெரிய வந்தது. உடனடியாக 2,600-க்கும் மேற்பட்ட போலியான தண்ணீர் பாட்டில்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டு கடைக்கு சீல் வைக்கப்பட்டது.

மினரல் வாட்டர் நிறுவனங்கள் தங்களுடைய தயாரிப்பு தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

இது உத்தரப்பிரதேசத்தில் தற்செயலாக வெளிப்பட்ட சம்பவம். ஆனால், உத்தரப்பிரதேசத்தில் மட்டுமல்ல, இந்த நிலைமை என்னவோ நாட்டில் வேறெந்த ஒரு மாநிலத்துக்கும் மாவட்டத்துக்கும் கூட பொருந்தும். ஏனெனில், வாங்குகிற ஒவ்வொரு மினரல் வாட்டர் பாட்டிலும் பாதுகாப்பானதா என்று யாரும் எங்கேயும் உறுதிப்படுத்திக் கொள்வதில்லை.

இந்தச் சம்பவம் போலி தயாரிப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக இருந்தாலும், நாம் அருந்தும் நீரின் தரம், பாதுகாப்பு குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது.

நம் உடலுக்கும் ஆரோக்கியத்திற்கும் தேவையான அத்தியாவசியமான நீர் தரமானதா? விலை கொடுத்து பாட்டில்களில் வாங்கி குடிக்கும் நீர் பாதுகாப்பானதா?

**இயற்கையான நீரும், சுத்திகரிக்கப்பட்ட நீரும்:**

சுத்திகரிக்கப்பட்ட நீர் என்று பாட்டில்களில் தண்ணீர் விற்கும் குறிப்பிட்ட நிறுவனங்கள், நீரைச் சுத்திகரிப்பு செய்த பிறகு அதில் மீண்டும் கனிமங்கள் சேர்க்கப்படுவதாகக் கூறுகின்றன. ஆனால் இந்தச் செயல்முறை சரியானது அல்ல. இயற்கையான நீரில் உள்ள கனிமங்களை நீக்கிய பிறகு அதே கலவையை மீண்டும்

செயற்கையான முறையில் கொண்டுவர முடியாது என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். அதேபோல ஒவ்வொரு பகுதியிலும் உள்ள நீரில் உள்ள கனிமங்களின் தன்மையும் மாறுபட்டிருக்கும் என்கின்றனர்.

இயற்கையான தண்ணீரில் உள்ள கனிமங்களின் கலவையைப் போலவே நிறுவனங்கள் செயற்கையாகத் தண்ணீரில் சேர்த்தாலும் அதன் முடிவுகள் ஒன்றாக இருக்காது, மாறுபட்டிருக்கும். அது இயற்கையான ஆரோக்கிய நீரைப் போன்று நன்மைகளைத் தராது என்கின்றனர்.

சுத்திகரிக்கப்பட்ட நீரில் மீண்டும் கனிமங்களைச் சேர்த்தாலும் அது இயற்கையான நீரில் உள்ள கனிம சமநிலையைக் கொண்டிருக்காது என்றும் இயற்கையான நீரில் உள்ள கனிமங்களைச் செயற்கையான நீரில் கொண்டு வருவது கடினம் என்றும் கூறுகின்றனர்.

**பாட்டில் நீர் ஆரோக்கியமற்றதா?**

கனிமங்கள் நீக்கப்பட்ட நீரை குடிப்பது உடலில் நீரேற்றத்தை மட்டுமே தரும், எந்த ஆரோக்கியத்தையும் அளிக்காது, மாறாக உடலுக்கு பல்வேறு தீங்குகளை விளைவிக்கும். அத்தியாவசிய தாதுக்கள் இல்லாத, உப்பு நீக்கப்பட்ட தண்ணீரை உட்கொள்வதால் மெக்னீசியம் குறைபாடு, டைப் 2 நீரிழிவு, பக்கவாதம், இதயப் பிரச்சனைகள் ஏற்படும்.

தண்ணீரில் உள்ள கனிம இழப்பை மக்கள் பெரிதாக கண்டுகொள்வதில்லை. சோர்வு, எரிச்சல், செரிமான பிரச்சனைகளுக்கு தண்ணீரில் போதுமான கனிமங்கள் இல்லாதது காரணமாக இருக்கலாம். பாட்டில்களில் விற்கப்படும் நீரால் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய பாதிப்புகளும் ஏற்படுகின்றன. இரண்டுமே ஆரோக்கியத்தை குறைக்கும்.

காலாவதி தேதி, கட்டாய உணவு குறியீடு, விலை, **FSSAI** உரிம எண் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்ட வேண்டும் என்று நுகர்வோர் விவகார அமைச்சகம் கூறுகிறது.

சந்தைகளில் விற்கப்படும் தண்ணீர் பாட்டில்கள் குறித்த வெளிப்படைத்தன்மை அவசியம். அந்தப் பாட்டில்களில் உள்ள நீரின் கனிம அளவு என்ன? என்னென்ன கனிமங்கள் சேர்க்கப்பட்டுள்ளன, அவற்றின் நன்மைகள் உள்ளிட்டவற்றை பட்டியலிட்டு அவற்றிற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

**இயற்கையான நீர் போதுமானது :**

இவை எல்லாம் ஒருபுறமிருக்க, மக்கள் என்ன செய்ய வேண்டும்? பாட்டில் தண்ணீருக்கு மாற்றே இல்லையா? நல்ல தண்ணீரைப் பருக என்னதான் செய்யலாம்?

பிரபல நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்தின் பெயர், முகவரி, பிராண்ட் பெயர், தொகுதி அல்லது குறியீட்டு எண், பேக்கிங் செய்யப்பட்ட தேதி, சுத்திகரிக்கப்பட்ட விவரங்கள்,

இயற்கையான தண்ணீரில் உள்ள தாதுக்களை அகற்றும் சாதாரண வடிகட்டுதல் முறையே போதுமானது. **அந்த வகையில் நீரில் இருக்க வேண்டிய நான்கு முக்கியமான தாதுக்கள்:**

**கால்சியம்** – ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் எலும்பு வளர்ச்சிக்கு இது அனைத்து வயதினருக்கும் முக்கியமானது.

**மெக்னீசியம்** – தண்ணீரில் உள்ள ஒரு முக்கியமான தாது. இது இதய நோயைத் தடுக்கிறது.

**சோடியம்** – நீர் மற்றும் தாதுக்களின் சமநிலையை பராமரிக்க சிறிய அளவு சோடியம் தேவை.

**புளோரைடு** – இயற்கையாகவே உலகின் சில பகுதிகளில் உள்ள நீரில் புளோரைடு காணப்படுகிறது. பல் சிதைவைக் குறைக்க உதவுகிறது. நீரில் இல்லாதபட்சத்தில் செயற்கையாகவே சேர்க்கப்படுகிறது.

மாநகராட்சி, நகராட்சி மூலமாக அல்லது நிலத்தடி நீர் குழாய் மூலமாக கிடைக்கும் நீரை வடிகட்டி பின்னர் காய்ச்சி பயன்படுத்தினாலே அதில் உள்ள சத்துக்கள் முழுமையாக கிடைக்கும்.

சுத்தமான பருத்தித் துணியால் வடிகட்டும்போது தண்ணீரில் உள்ள தூசி உள்ளிட்ட மாசுக்கள் தனியாகப் பிரிந்துவிடும். பின்னர் அதனை காய்ச்சிப் பருகலாம்.

மண்பானையில் தண்ணீரை ஊற்றி வைத்து 2 முதல் 5 மணி நேரம்



வைத்திருந்தால் மண் இயற்கையாகவே தண்ணீரில் உள்ள அனைத்து மாசுக்கள், வைரஸ், பாக்டீரியாவை உறிஞ்சிக் கொள்ளும். அதனை அப்படியே பருகலாம்.

அதுபோல செம்புப் பாத்திரங்களிலும் தண்ணீர் ஊற்றி வைக்கும்போது சுத்தமான அதே நேரத்தில் கனிமங்கள் அடங்கிய நீர் கிடைக்கும்.

வீடுகளில் உள்ள ஆர்.ஓ. தண்ணீரில் கனிமங்கள் இருக்கிறதா என்பதை சோதனை செய்து கொள்ள வேண்டும். சாதாரணமாக ஆர்.ஓ. தண்ணீரில் மாசுக்கள், கனிமங்கள் அனைத்தும் நீக்கப்பட்டுவிடும். இதனாலே அது சுத்தமானதாகவும், சுவையாகவும் இருக்கிறது. ஆனால், நீக்கப்பட்ட கனிமங்கள் மீண்டும் சேர்க்கப்படுவதில்லை என்பதால் எந்த சத்தும் கொண்டிருக்காது.

மினரல் வாட்டர் என்றாலும் அதனை நிரப்பும் கொள்கலன், பாட்டில்கள் அசுத்தமாக இருந்தால் உடலுக்குத் தீங்கு ஏற்படும். எனவே, தண்ணீர் இருக்கும் கேன்கள், பாட்டில்கள் சுத்தமாக இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.



Traditional by Generations
BG நாயுடு
ஸ்வீட்ஸ் | ஸ்நாக்ஸ் | பேக்கரி
சொந்த பண்ணை பாலில் தயாராகும் இனிப்புகள்...
திரு. ப. பாலாஜி
சேர்மன் - B.G.நாயுடு
HAPPY DIWALI
BG Naidu
Elaneer Payasam
ROSE MILK
BG Naidu
Traditional by Generations
BG Naidu Sweets Pvt Ltd
Head Office: 29-K, Elango Street, Sangliandapuram
Trichy 620001. sales@bgnaidusweets.com
www.bgnaidusweets.com | /bgnaidusweets
46+ BRANCHES @ TRICHY, MADURAI, PUDUKKOTAI, PERAMBALUR, DINDIGUL, THANJAVUR, PATTUKOTTAI & KARAIKUDI
For Corporate Order & Bulk Orders: +91 9514686868
fssai Lic No. 12418028000292


Rajmahal
Silks • Textiles • Readymades
A Tradition of Excellence in Silk
47 & 48, EAST VELI STREET, MADURAI-1
PH : 72000 07373
Rajmahal's
Silk Story
A Tale of Exclusive Weaves
169, KK NAGAR, EAST 5TH STREET, MADURAI - 20
PH : 95007 95005
Rajmahal's
AISHVARYAM
GOLD • SILVER • DIAMONDS • PLATINUM
THANGANAGAI MAALIGAI
191, EAST VELI STREET, MADURAI - 625001
PH : 74488 80740
WHATSAPP SHOPPING // 72003 33333, 72001 11111
Online Shopping //www.rajmahalsilks.com